ஊர்வலம் நடத்துவோம் என்று அறிவித்தார்கள், ஏனோ அது ஒத்திபோடப்பட்டு விட்டது. நான் என்ன கேட்கிறேன் என்றால், நாம் ஏன் இதற்காகவும் டெல்லியில் முதல் அமைச்சர் தலைமை யிலேயே ஊர்வலம் நடத்தக்கூடாது, போராடக் கூடாது என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, போராட வேண்டிய அவசியமான நிலைமை இல்லை, அவர்களே சலுகைகளை தரவேண்டும் என்று முன் வந்திருக்கி றார்கள் என்பது தான் நான் ஏற்கெனவே சொன்ன பதில்.

[முற்பகல் 9–40]

திரு. ஜே. ஜேம்ஸ்: இத்தனை பிரச்னைகளுக்கும் காரணம், அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஷெட்யூல்ட் காஸ்ட் என்று சொன்னால் இந்துவாகத்தான் இருக்கவேண்டும் என்று இருக்கிறது. ஆகவேதான் இந்துக்கள் அல்லாத ஷெட்யூல்ட் காஸ்ட்டைச் சார்ந்த மக்களுக்கு இந்தச் சலுகைகள் பெற வாய்ப்பில்லை. ஆகவே, அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு நமது சட்டசபையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்புவதற்கு இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: புத்த மதத் திற்கு மாறியவர்களுக்கும் இந்தச் சலுகை தற்போது விரிவு படுத்தப்பட்டிருக்கிறது. இதில் ஒன்றும் பிடிவாதம் இருப்பதாக இந்த அரசு கருதவில்லை. ஆகவே சட்ட மன்றத்தில் தீர் மானம் நிறைவேற்றப்படவேண்டிய அவசியமே ஏற்படாது.

கள்ளக்குறிச்சியில் கிளை அச்சகம்

*வினா 54—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கள்ளக்குறிச்சியில் அரசு கிளை அச்சகம் ஒன்று அமைக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இல்லை.

கொடுமுடியாறு அணைத் திட்டம்

*வினா 55—திரு. மு. ஜான் வின்செண்ட்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கொடுமுடியாறு அணைத் திட்டம் எப்போது செயல்படும், இத்திட்டம் தற்போது எந்நிலையில் உள்ளது?